


# இணையவழி அடாவடித்தனம்


amazon future engineer

எண்ணங்களைஅறியவும், மக்களைச் சந்திக்கவும், அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும் இணையம் ஒரு சிறந்த இடம் ஆகும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக சிலர் இணையத்தில் இரக்கமற்றவர்களாக நடந்துகொள்கிறார்கள். இதுதான் இணையவழி அடாவடித்தனம் என்று அழைக்கப்படுகிறது. ஒருசிலர் டிஜிட்டல் தளங்களான சமூகஊடகம் அல்லதுசெய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்தி மற்றவர்களை இழிவுபடுத்தும்போதும் மரியாதை குறைவாக நடத்தும்போதும் இது நிகழ்கிறது. இணையவழி அடாவடியை எப்படிஅடையாளங்கண்டு எதிர்கொள்வது என்று அறிந்துகொண்டால் இணைய வெளிகள் உங்களுக்கும் உங்கள்நண்பர்களுக்கும் பாதுகாப்பான்வைகளாகவும் மகிழ்ச்சி அளிப்பவையாகவும் மாறும். நீங்கள் 13 வயதுக்கும் குறைந்தவராக இருந்தால் எப்போதும் சமூக ஊடகத்தைப் பாதுகாப்பாக எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதற்கு உதவும்படி ஒரு பெரியவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்!









பல வகையானஇணைய அடாவடிகள் பற்றி அடில்கற்றுக்கொள்கிறார். ஆனால் அவருக்குக் கிடைக்கும் தகவல் எல்லாம் குழப்பமாகஇருக்கின்றன. ஒவ்வொரு வகையான இணையஅடாவடியையும் அதன்சரியான வரையறையுடன் பொருத்திப் பார்க்க உங்களால் அவருக்கு உதவ முடியுமா?


ஆள்மாறாட்டம்


இணைய பின்தொடர்தல்


விலக்குதல்


இணைய துன்புறுத்தல்


அவுட்டிங்

இணையத்தில் இருக்கும் யாரோ ஒருவருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து இழிவானஅல்லது மிரட்டும் செய்திகளை அனுப்புவது.

இணையத்தில் யாரோ ஒருவராக நடித்து வேறொருவரின் பேரபுகழைக் குலைக்கும்படி இணையத்தில் போஸ்ட் செய்வது அல்லது புண்படுத்தும் செய்திகளை அனுப்புவது.

இணையத்தில் ஒருவர் அச்சப்படும்படி அல்லது அவரைப் பயமுறுத்தும் வகையில் தொடர்ந்து கவனிப்பது அல்லது பின்தொடர்வது.


ஒருவருக்கு மன உளைச்சல் உண்டாகும்படியாக அவரது தனிப்பட்ட தகவல் அல்லது படங்களை அவருடைய அனுமதி இல்லாமல் பகிர்வது.

இணையக் குழுக்கள், கேம்கள் அல்லது அரட்டைகளில் இருந்து ஒருவர் தனியாக விடப்பட்டோமோ என்று உணரும் வகையில் அவரை விட்டு விலகுவது.

|சைபர் துன்புறுத்தல் | மாணவர்களின் அதிபதி | மிச்சிகன் Tech (n.d.).


# இணைய அடாவடித்தனத்தை நிறுத்துதல்

இணையத்தில் பாதுகாப்பான முறையில் இயங்குவதற்கு இணைய அடாவாடித்தனத்தை எப்படி எதிர்கொள்வது என்பதை அறிவதுமுக்கியம் ஆகும். நீங்கள் அல்லதுஉங்களுக்குத் தெரிந்த ஒருவர் அடாவடிக்கு உள்ளாவதாக நீங்கள் நினைத்தால் உடனடியாக உங்கள் பெற்றோர், நெருங்கிய குடும்ப உறுப்பினர் அல்லதுமற்றொரு நம்பிக்கைக்கு உரிய பெரியவர் (உங்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள்) போன்றவர்களிடம் இருந்து உதவி பெறவேண்டும். தீங்குதரும் பதிவுகள் அல்லது கணக்குகளைப் பற்றி புகார்அளிப்பதன் மூலம்அடாவடியை நிறுத்த முடியும். இந்தச் செயல்களைக் கற்றுக்கொள்வதன் மூலம் இணையத்தை அனைவருக்கும் பாதுகாப்பானதாக மாற்றலாம்.




அடிலும் அவருடைய நண்பர்களும் ஒரு கதையைப் படிக்கிறார்கள். இணைய அடாவடியை எதிர்கொள்ள அதில்பயன்படுத்தப்படும் உத்திகளை அவர்கள் அடையாளம் காண உங்களால் உதவ முடியுமா?

சமூக ஊடகத்தில் ஒரு நாள்மாயா ஒரு மோசமான செய்தியைப் பெற்றாள். அது அவளுக்கு வருத்தத்தையும் வேதனையையும் அளித்தது. ஆனால் பதிலளிப்பதற்குப் பதிலாக அந்தச்செய்தியைப் புறக்கணித்து அதை அனுப்பிய நபரைத் தடுக்கமுடிவு செய்தாள். தனக்கு நம்பிக்கையான ஒருவருடன் பேசுவது முக்கியம் என்பதைஅவள் அறிந்திருந்தாள். அதனால் அவள்தன் அக்காவைத் தொடர்பு கொண்டுநடந்ததைப் பகிர்ந்து கொண்டாள். அவளுடைய சகோதரி அதைக்கேட்டு, அந்தக் கருத்துகள் உண்மையல்ல என்பதைக் கூறிஅவளை தைரியபப்டுத்தினாள். அடாவடியை நிறுத்த உதவுவதற்காக அவர்கள் இருவரும் சேர்ந்து தளத்தின் பயனரிடம் புகார் அளித்தனர். கூடுதல் பாதுகாப்புக்காக நிகழ்வைக் குறித்துப் புகார் அளிக்க 1930 என்ற சைபர்கிரைம் போலீஸ்ஹெல்ப்லைனை அழைத்தனர். அவர் எதிர்காலத்தில் இணைய மிரட்டலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து மாயாவுக்கு ஆலோசனைவழங்கினார். அதைப் பற்றி பேசியபின் மாயா தைரியாமாக உணர்ந்தாள். மேலும் சூழ்நிலையைப் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் கையாண்டதற்காக அவள் பெருமைப்பட்டாள்.







## பயனுள்ள தகவல்

- ·உங்களுக்குத் தெரிந்த ஒருவர் பேசுவது உங்களுக்கு சரியாகத் தோன்றவில்லை என்றால் ஒரு தொழில்முறை ஆலோசகரிடம் பேசி 1930 என்ற சைபர்கிரைம் போலீஸ்உதவி எண்ணைஅழைக்கவும்.
- சமூக ஊடகங்களில் அடாவடி நடந்தால் அந்த நபரைத் தடுத்து அவரது நடத்தையைப் பற்றி நேரடியாக தளத்தில் புகார் அளிக்கவும். பயனர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய கடமை சமூக ஊடகத் தளங்களுக்கு உண்டு.



சைபர் கிரைம் மிரட்டல்: அப்படி என்றால் என்ன, அதை எப்படி நிறுத்துவது. (n.d.). யுனிசெஃப் ,

# நகைச்சுவையும் அடாவடியும்



சில நேரங்களில் தனது நண்பர்கள் இணையத்தில் ஒருவரைஒருவர் கேலிசெய்து கொள்வதை அடில் கவனித்தார். அவர்கள் வழக்கமாக சிரிக்கும்போது யாரோ ஒருவர் சங்கடப்படுவதோ அல்லது புண்படுவதோ உண்டு. ஒரு நகைச்சுவை எப்போது எல்லை மீறிஅடாவடியாக மாறும்? சில நேரங்களில் நகைச்சுவைகளை அடாவடிகளோடு வைத்துக் குழப்பிக்கொள்ளவும் நேரும். ஆனால் இவற்றிற்கு இடையில் ஒரு வித்தியாசம் உள்ளது!




## நகைச்சுவைகள்:

- அவை அனைவருக்கும் வேடிக்கையானதாக இருக்கும்!
- அவை யாராவது ஒருவரைத் தனிமைப்படுத்தி இழிவு செய்யாது.
- ஒருவருக்கு ஒருவர் மதிப்போடு நடந்துகொள்ளும் மகிழ்ச்சியான சூழலில் அவை நிகழும்.






## இணைய அடாவடி

- வார்த்தைகளும் நடவடிக்கைகளும் ஒருவரைப் புண்படுத்தும், பயப்படுத்தும், விரட்டி அடிக்கும்.
- இணைய அடாவடித்தனத்தில் யாராவது ஒருவர் குறிவைக்கப்பட்டு கேலிக்குள்ளாகி அவமதிக்கப்படுவார்.
- பரஸ்பர மரியாதை இல்லாத இடத்தில் அச்சுறுத்தும் சூழல்களில் இது நடைபெறுகிறது.



## சுய-பரிசோதனைசரிபார்ப்புப்பட்டியல்: நான் ஜோக்சொல்கிறேனாஅல்லதுஇணைய அடாவடித்தனம்செய்கிறேனா?

நீங்கள் ஆன்லைனில் எப்படி நடந்துகொள்ளுகிறீர்கள் என்பதைப் பற்றிசிந்திக்க இந்தச்சரிபார்ப்புப் பட்டியலைப் பயன்படுத்துங்கள். மேலும் மற்றவர்களுடன் ஆன்லைனில் நேர்மறை உணர்வோடும், மரியாதையுடனும், கவனமாகவும் ஈடுபடுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இணையத்தில் அடாவடித்தனம் செய்வதைத் தவிர்க்கவும்!

- ☐ ·சம்பந்தப்பட்ட நபர்இந்த வகையானநகைச்சுவையை வரவேற்பாரா என்று நான்சோதித்துப் பார்த்திருக்கிறேனா?
- ☐ ·எனது சொற்கள் அல்லது படங்கள் புண்படுத்தக் கூடியவையா அல்லது அவமரியாதை செய்பவையா?
- ☐ ·யாரையாவது அவர்களுடன் சேர்ந்து சிரிக்க வைக்க அல்லதுஅவர்களைப் பார்த்து சிரிக்க இதை இடுகையிடுகிறேனா?
- ☐ நான் நகைச்சுவையாகச் சொல்லும்போது மற்றவர்கள் அதற்கு எவ்வாறு எதிர்வினையாற்றுகிறார்கள் என்பதில் நான் கவனம் செலுத்துகிறேனா?
- ☐ யாராவது என்னைப் பற்றி இதே போன்ற கருத்தைச் சொன்னால் நான் ஏற்றுக்கொள்வேனா?
- ☐ நான் கூறிய ஏதாவது ஒரு விஷயத்தால் யாராவது புண்பட்டதாகத் தோன்றினால் நான் மன்னிப்பு கேட்க வேண்டுமா?



## ஆன்லைன் குழுக்களில் யாராவது இணையஅடாவடித்தனம் செய்வதை நீங்கள் கவனித்தால் உங்களால் என்னநடவடிக்கை எடுக்கமுடியும்?

1. தளத்தில் அடாவடிசெய்பவர் குறித்து புகார் அளிக்கவும். தேவைப்பட்டால் நம்பகமான ஒரு பெரியவரைத் தொடர்பு கொள்ளவும்.
2. அடாவடிக்கு ஆளாகுபவருக்கு ஆதரவளிக்கவும்.
3. மரியாதையோடும் நட்புரீதியாகவும் தொடர்புகொள்ளுவதற்கான குழுவிதிமுறைகளை ஊக்குவிக்கவும்.
4. அடாவடி தொடர்ந்தால் அடாவடிக்கு ஆளாகுபவரின் ஒப்புதலுடன் குழுவில் அடாவடி செய்பவரை எச்சரிக்கவும்.

# பாதுகாப்பான வெளிகள்

amazon future engineer

உங்களுக்குத் தெரியுமா?

30 நாடுகளில் மூன்றில் ஓர் இளைஞர்ஆன்லைன் அடாவடிக்கு ஆளாகியுள்ளதாகக் கூறிஇருக்கிறார். ஐந்தில் ஒருவர் இணையஅடாவடி மற்றும் வன்முறை காரணமாக பள்ளிக்குப் போகாமல் தவிர்த்துவிட்டதாகக் கூறியுள்ளார். 2019 ஆம் ஆண்டில் யுனிசெஃப் (UNICEF) மற்றும் குழந்தைகளுக்கு எதிரானவன்முறை குறித்த ஐ.நா. பொதுச்செயலாளரின் சிறப்புப் பிரதிநிதி (SRSG) வெளியிட்ட கருத்துக் கணிப்பின்படி.



இணைய அடாவடியை எப்படி எதிர்கொள்வது என்பதையும் ஆன்லைன் வெளிகளை அனைவருக்கும் பாதுகாப்பானதாக மாற்றுவதற்கான நேர்மறையான வழிகளைக் கற்றுக்கொள்ளவும் இந்தபிங்கோவைப் பயன்படுத்தவும். இந்தச் செயல்களைப் பயிற்சி செய்யும்போது அல்லது அவற்றைச் செயலில் காணும்போது ஒவ்வொரு சதுரத்திலும் குறியிடவும்!

| | | | |
|---|---|---|---|
| இழிவாக நடந்துகொண்ட ஒருவரைத் தடுத்தேன் | ஒரு மோசமான கருத்தைக் குறித்துப் புகார் அளித்தேன் | ஒரு நாகரிகமற்ற செய்திக்கு பதில் அளிக்காமல் புறக்கணித்தேன் | இணைய அடாவடி பற்றி ஒரு நம்பிக்கைக்குரிய பெரியவரிடம் சொன்னேன் |
| ஒரு நண்பரை ஆன்லைனில் அன்பாக நடந்துகொள்ளுமாறு நினைவூட்டினேன் | மோசமான கருத்துகளை இடுகையிடுவதை நிறுத்துமாறு ஒருவரிடம் கூறினேன் | ஒருவரை ஆன்லைனில் பாராட்டினேன் | ஆன்லைனில் அடாவடிக்கு உள்ளானதாக உணர்ந்த ஒரு நண்பருக்கு உதவினேன் |
| இணையத்தில் இருந்து விலகி ஓய்வு எடுத்தேன் | அடாவடிக்கு ஆளான ஒருவருக்குத் துணையாக நின்றேன் | கோபமாக எதிர்வினையாற்றுவதற்குப் பதிலாக அமைதியாக இருந்தேன் | நியாயமாகவும் கனிவாகவும் ஒரு கேம் ஆடினேன் |
| நேர்மறையாகப் பேசுவதற்குப் பயிற்சி செய்தேன் | எனது அனைத்து நண்பர்களையும் ஓர் ஆன்லைன் விளையாட்டில் சேர்த்தேன் | ஒரு போலி கணக்கு/ ஆள்மாறாட்டம் குறித்து புகார் அளித்தேன் | ஆன்லைனில் பாதுகாப்பாக இயங்குவது பற்றி அறிந்துகொண்டேன் |

நாம் அனைவரும் இணைய அடாவடியை ஒழிப்பதற்கும் ஒருவருக்கொருவர் தீவிரமாக ஆதரவளிப்பதற்கும் உழைத்தால் மட்டுமே ஆன்லைன் வெளிகளைப் பாதுகாப்பாக மாற்றமுடியும் என்பதைநினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!

# பதிலுக்கானகுறிப்பு

## இணைய அடாவடி




ஒருவரை வருத்தப்படுத்த ஆன்லைனில் மோசமான அல்லது அச்சுறுத்தும் செய்திகளை மீண்டும் மீண்டும் அனுப்புதல்.

ஒருவருடைய நற்பெயருக்கு களங்கம் விளைவித்துப் புண்படுத்தும் செய்திகளை இடுகையிட அல்லது அனுப்ப ஆன்லைனில் வேறொருவரைப் போல நடிப்பது.

பயமுறுத்தும் அல்லது அச்சுறுத்தும் வகையில் ஒருவரை ஆன்லைனில் தொடர்ந்து பார்ப்பது அல்லது பின்தொடர்வது.

ஒருவரின் தனிப்பட்ட தகவல்கள் அல்லது படங்களை அவர் அனுமதியின்றி ஆன்லைனில் பகிர்வது, சங்கடத்தை ஏற்படுத்துவது.

ஒருவரை அவர் ஒதுக்கி வைக்கப்படுவதாக உணர வைப்பதற்காக வேண்டுமென்றே ஆன்லைன் குழுக்கள், கேம்கள் அல்லது அரட்டைகளில் இருந்து அவரை விலக்கி வைத்தல்.



## இணைய அடாவடியைநிறுத்துதல்

சமூக ஊடகத்தில் ஒரு நாள்மாயா ஒரு மோசமான செய்தியைப் பெற்றாள். அது அவளுக்கு வருத்தத்தையும் வேதனையையும் அளித்தது. ஆனால் பதிலளிப்பதற்குப் பதிலாக அந்தச் செய்தியைப் புறக்கணித்து அதை அனுப்பிய நபரைத் தடுக்க முடிவு செய்தாள். தனக்கு நம்பிக்கையான ஒருவருடன் பேசுவது முக்கியம் என்பதை அவள்அறிந்திருந்தாள். அதனால் அவள் தன் அக்காவைத் தொடர்பு கொண்டு நடந்ததைப் பகிர்ந்து கொண்டாள். அவளுடைய சகோதரி அதைக்கேட்டு, அந்தக் கருத்துகள் உண்மையல்ல என்பதைக் கூறிஅவளை தைரியப்படுத்தினாள். அடாவடியை நிறுத்த உதவுவதற்காக அவர்கள் இருவரும் சேர்ந்து தளத்தின் பயனரிடம் புகார் அளித்தனர். கூடுதல் பாதுகாப்புக்காக நிகழ்வைக் குறித்துப் புகார் அளிக்க1930 என்ற சைபர் கிரைம் போலீஸ் ஹெல்ப்லைனை அழைத்தனர். அவர் எதிர்காலத்தில் இணையமிரட்டலை எவ்வாறு எதிர்கொள்வது என்பதுகுறித்து மாயாவுக்கு ஆலோசனை வழங்கினார். அதைப் பற்றிப் பேசியபின் மாயா தைரியமாக உணர்ந்தாள். மேலும் சூழ்நிலையைப் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் கையாண்டதற்காக அவள் பெருமைப்பட்டாள்